**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**C.C. No: 6/2020**

**Deposition of Witnesses for PW1**

| | | | |
|---|---|---|---|
| Name | : | போத்தி | Caste: |
| Father's Name | : | | Calling: |
| Village | : | | Religion: |
| Taluk | : | | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 25.11**.2022**

முதல் விசாரணை

நான் தற்போது சேத்தூர் ஊரக காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். நான் 03.09.2019ம் தேதி காவல்நிலையத்தில் பணியில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் அங்கீஸ்வரன் மற்றும் முருகேசன் மற்றும் பார்ட்டியுடன் ரோந்து பணி சென்றபோது சுந்தரபுரம் கிராமத்தில் சீனியப்பன் மகன் கணேசன் என்பவர் மாசாணாகோவில் தெருவில் கஞ்சா வைத்திருப்பதாக தகவல் தெரிவித்து சென்றபோது கையில் மஞ்சள் பையுடன் தாமரை பூ படம் போட்ட பையுடன் கோல்டு நெய்கிச்சடி அரிசி பையில் கஞ்சா வைத்திருப்பதாக தெரிந்தது. அவரிடம் 2.100 கிகி கஞ்சா இருந்தது. அதில் 100 கிராம் கஞ்சாவை சாம்பில் எடுத்து பகுப்பாய்வுக்குஅனுப்பி தனியாக நிறுத்து காக்கி கலர் பேப்பரில் பெட்டலமாக கட்டி எஸ்.ஹெச்ஓ சீல் வைத்தும் மீதமுள்ள கஞ்சாவை இன்னொரு பொட்டலமாக கட்டி எஸ்.ஹெச்ஓ சீல் வைத்தும் எதிரிகள் மற்றும் சொத்துக்களுடன் நிலையம் கொண்டு வந்து அத்தாட்சியில் தனி நபர் யாரும் கையெழுத்து செய்யாததால் போலீஸ் பார்ட்டியாகிய நான் மற்றும் முருகேசன் ஆகியோர் சாட்சி கையெழுத்து போட்டோம். எதிரியை காவல் நிலையம் கொண்டு வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தேன். நடந்த விவரத்தை சொன்னேன். நானும் முருகேசனும் கையெழுத்து போட்ட அத்தாட்சி அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>**எதிரி தரப்பில் கு.வி.**</u>

சார்பு ஆய்வாளர் கிடைத்த தகவலை எழுத்துப்பூர்வமாக எழுதி தான் போனார் என்றால் எனக்கு தெரியாது. நான் ரோந்துக்கு இருசக்கர வாகனத்தில் சென்றோம். மொத்தம் 3 பேர் சென்றோம். மாசாணகோவில் தெரு 1/2 கிமீ தூரம் இருக்கும். எந்த இடத்தில் எதிரிகளை வைத்து பிடித்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மகஜரை யார் எழுதினார் என்றால் எஸ்.ஐ. எழுதினார். நானோ முருகேசனோ எழுதவில்லை. மகஜரில் எதிரியிடம் கையொப்பம் வாங்கினோம். மகஜரில் பையை கைப்பற்றிய விவரங்களை சொல்லவில்லை. எதிரியை 12.30 கைது செய்தோம். சாம்பிலில் நானும் முருகேசனும் கையெழுத்து போட்டோம். திராசு படிக்கல் பக்கத்தில் கருணாகரன் கோழிகடையில் இருந்து

வாங்கி சென்றோம். கருணாகரனை சார்பு ஆய்வாளர் வழக்கில் சாட்சியாக போடவில்லை. தனிநபர்கள் பெயர், விலாசம் குறிக்கவில்லை. அவர்கள் மீது குற்ற வழக்கு தாக்கல் செய்யவில்லை. எங்கள் சார்பு ஆய்வாளர் தகவல் வந்ததாகவும், அதன்பேரில் நாங்கள் ரைடு சென்றதாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து கஞ்சா கைப்பற்றியதாக சொல்வத பொய் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்ட மகஜரில் நானும் முருகேசனும் கையெழுத்து போட்டோம் என்றால் சரியல்ல. எதிரியை வீட்டிலிருந்து விசாரணைக்குஎன்று அழைத்து சென்று இந்த வழக்கில் சேர்ந்துள்ளோம் என்றால் சரியல்ல. உயர் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court
read over to the witnesses and
admitted by him / her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.